TNPDA
TAMILNADU PETROLEUM DEALERS ASSOCIATION
United We Stand - Divided We Fall

பதிவு எண். 142/80 | நாள் : 15.07.2025

# தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்க

## அசாதாரண பொதுக்குழு கூட்ட அழைப்பிதழ்

அனைத்து பொது உறுப்பினர்களுக்கும்,
அன்பிற்கினியீர், வணக்கம்.

எதிர்வரும் **12.08.2025 செவ்வாய்கிழமை** காலை 09.30 மணி முதல் திருச்சி, சமயபுரம், அனுகுசாலையில் அமைந்துள்ள **ரெட்டியார் மஹாலில்** தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்கத்தின் **அசாதாரண பொதுக்குழுக் கூட்டம்** நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தின் பொருள் பின்வருமாறு.

**கூட்டப் பொருள் :**

1. தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்கத்தின் கீழ்கண்ட சங்க விதிகளில் **(Bye Law)** திருத்தங்கள் கோருவது தொடர்பான பொது உறுப்பினர்களின் கருத்துக்கள்.
2. திருத்தங்களுக்குரிய சங்க விதி எண். 2, 3 (F), 4, 5, 6, 7, 8, 9, 9(B), 9(C), 9(D), 9(E), 9(F) மற்றும் புதிதாக சங்க விதி எண்.9(G), 9(H), 9(I), மேலும் 11, 12, 16(A), 19, 20, 22, 22(A), புதிதாக 22(B), 22(C), மற்றும் 23, 24, 24(A), புதிதாக 28 ஆகிய விதிகளில் திருத்தம் மேற்கொள்ள கருத்துக்கள் வேண்டப்படுகிறது.
3. தலைவர் அனுமதியுடன் வியாபாரம் சம்மந்தமாக பொது உறுப்பினர்களின் கருத்துக்கள்.

நிர்வாகக்குழு மற்றும் சங்க விதிகள் திருத்தக்குழு பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்நாடு சங்கங்களின் பதிவு சட்டம் 1978-ன் விதிகளுக்குட்பட்டு மேற்படி திருத்தங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இது குறித்து பொது உறுப்பினர்கள் அறிவதற்காக ஏற்கனவே உள்ள விதிகள் அதன் மீதான திருத்தங்களின் பட்டியல் மற்றும் அசாதாரண கூட்ட அழைப்பிதழினை தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்க இணையதளத்தில் 19.07.2025 முதல் உறுப்பினர்கள் பார்வையிடலாம்.

ஆகவே, மேற்படி பொதுக்குழுவில் மாநில சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர்கள் மற்றும் இணைப்பு மாவட்ட சங்க நிர்வாகிகளும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறேன்.

மாநில சங்கத்தின் இணையதள முகவரி : **www.tnpda.in**

தங்களன்புள்ள,
**மு.ஹைதர் அலி** பொதுசெயலாளர்,
தமிழ்நாடு பெட்ரோலிய விற்பனையாளர்கள் சங்கம்.
முகாம் : ஒட்டன்சத்திரம்.

# நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| காலை 9.30 மணி | : | **உறுப்பினர்கள் வருகை பதிவு** |
| காலை 10.00 மணி | : | **தமிழ்தாய் வாழ்த்து** |
| காலை 10.05 மணி | : | **குத்து விளக்கு ஏற்றுதல்** |
| காலை 10.10 மணி | : | **மறைந்த உறுப்பினர்களுக்கு அஞ்சலி** |
| காலை 10.15 மணி | : | **வரவேற்புரை** |
| காலை 10.30 மணி | : | **சங்க விதிகள் திருத்தம் தொடர்பான விளக்கவுரை - A.J.சூர்யநாராயணன்** |
| காலை 10.45 மணி | : | **சங்க விதிகள் திருத்தம் தொடர்பான கருத்துரை - தலைவர்** |
| காலை 11.00 மணி | : | **சங்க விதிகளின் திருத்தங்கள் குறித்த அறிவிப்பு - செயலாளர்** |
| காலை 11.15 மணி | : | **பொது உறுப்பினர்கள் கருத்துரை** |
| நண்பகல் 12.00 மணி | : | **நன்றியுரை** |
| பிற்பகல் 12.10 மணி | : | **நாட்டுப்பண்** |
| பிற்பகல் 12.20 மணி | : | **மதிய உணவுடன் கூட்டம் இனிதே நிறைவு பெறுகிறது.** |